பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொது...

விலை ரூபா 1-25

ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் [illegible] வைகாசி 3 ஷஃபான் 14 இதழ் 91
யாழ்ப்பாணம் புதன்கிழமை 16 5-84

"இந்திரா, எம். ஜி. ஆர். கோரிக்கைமீது பணயக்கைதிகளை விடுவிக்கின்றோம்"

நேற்று வெளியான துண்டுப்பிரசுரத்தில் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ராமச்சந்திரன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்திய கமிட்டியினர் ஆகியோரின் கோரிக்கை மீதும், இவர்களது விருப்பத்தைக் கௌரவிக்கும் முகமாகவும் பணயக் கைதிகளை 14ம் திகதி திங்கட்கிழமை விடுவித்தோம்" என்று நேற்று மக்கள் விடுதலைப் படை விடுத்துள்ள துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் பணயக் கைதிகள் கொல்லப்படுவார்கள் என்று எச்சரித்திருந்தோம். ஆனாலும் பணயக் கைதிகளின் உயிரைப் பாதுகாக்க இலங்கை அரசாங்கம் எவ்வித கவனமும் செலுத்தவில்லை என்பதை உலக மக்களுக்கு குறிப்பாக அமெரிக்க மக்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகின்றோம். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உத்தரவின்மீது பணயக் கைதிகளை விடுவிக்கின்றோம். பணயக் கைதிகளை எந்தவிதத்திலும் துன்புறுத்தவில்லை என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்" என்று மக்கள் விடுதலைப் படை தமது துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

பிரத்தியேக செய்தி

அமெரிக்கத் தம்பதிகள் யாழ் நகரில் விடுவிக்கப்பட்டனர்

உடனடியாகவே கொழும்பு கொண்டுசெல்லப்பட்டனர்

[யாழ்ப்பாணம்]

கடந்த வியாழக்கிழமை இரவு மக்கள் விடுதலைப் படையினரால் கடத்தப்பட்ட அமெரிக்கத் தம்பதிகள் திரு. ஸ்ரான்லி அலனும், அவரது துணைவியார் திருமதி மேரி அலனும் ஐந்து நாட்களுக்குப் பின்னர் நேற்றிரவு எட்டரை மணியளவில் யாழ். நகரில் கடத்தல்காரர்களினால் விடுவிடுக்கப்பட்டனர்!

பொறியியலாளர் திரு. ஸ்ரான்லி அலனும் திருமதி மேரி எலிஸபெத் டேமனும் நேற்றிரவு எட்டரைமணியளவில் கடத்தல்காரர்களால் யாழ்ப்பாணம் மேற்றிராணியார் இல்லத்தில் (பிஷப் ஹவுஸ்) விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்றிராணியார் இல்லத்திலிருந்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. பிராங் சில்வாவும், பொலிஸ் அதிபர் திரு. ரி. ஈ. ஆனந்தராஜாவும் பலத்த பொலிஸ் காவலுடன் மேற்றிராணியார் இல்லத்துக்குச் சென்று அமெரிக்கத் தம்பதிகளைப் பொறுப்பேற்ற

(8ம் பக்கம் பார்க்க)

"கொள்ளைக்கும் எமக்கும் சம்பந்தமில்லை"

மக்கள் விடுதலைப் படை அறிவிப்பு

[யாழ்ப்பாணம்]

அமெரிக்கத் தம்பதிகள் கடத்தப்பட்டபோது ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுச் [illegible] நோட்டுக்கள் கொள்ளையடிக்கப்பட்டதற்கும் தமக்கும் எதுவிதத் தொடர்புமில்லை என்று மக்கள் விடுதலைப் படையினர் தெரிவித்துள்ளனர்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஆயுதப் படைப் பிரிவு என்று குறிப்பிடப்பட்டு மக்கள் விடுதலைப் படையினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (EPRLF) மக்கள் விடுதலைப் படையினராகிய எம்மால் கடந்த வியா

(8-ம் பக்கம் பார்க்க)

நேற்றும் ஹர்த்தால்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்றும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இ. போ. ச. பஸ்கள், தனியார் பஸ்கள் சேவையிலீடுபடவில்லை.

மட்டக்களப்புச் சந்தையிலுள்ள ஒருசில கடைகள் மட்டுமே திறந்தன.

(8ம் பக்கம் பார்க்க)

"கடத்தல்காரர்மீது நடவடிக்கை இருக்காது"

அமைச்சர் லலித் கூறுகிறார்

[கொழும்பு]

"அமெரிக்கத் தம்பதிகளை விடுதலை செய்யும் கடத்தல்காரர்கள் மீது அரசாங்கப் பாதுகாப்புப் படைகள் திட்டமிட்டு நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளாது" என்று தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நேற்று உறுதியளித்துள்ளார்.

நேற்றுப்பகல் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"யாழ்ப்பாணத்தில் வைத்து அமெரிக்கர்களான திரு. ஸ்டான்லி அலென், திருமதி மேரி அலென் தம்பதியைக் கடத்தியவர்கள் தாம் அவர்களை விடுதலை செய்துள்ளதாக அறிவித்துள்ளனர். ஆனால் நேற்று அதிகாலை முதல் யாழ் குடா நாட்டின் சகல இடங்களிலும் அத்தம்பதிகளைத் தேடிய பாதுகாப்புப் படைகள் ஆகாய, தரை, கடல் மார்க்கமாக முடுக்கி விட்ட தேடுதல் நடவடிக்கைகள் எதுவித முடிவையும் காணவில்லை. கிளிநொச்சி, மாங்குளம் ஆகிய பகுதிகளில்

(8ம் பக்கம் பார்க்க)

அரச அதிபர் கொழும்பு சென்றார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா நேற்று அவசரமாக கொழும்பு பயணமானார்.

பத்மநாபன்

லெபனானில் பயிற்சிபெற்றவர்

(இ சந்தசமி

அமெரிக்கத் தம்பதிகளை விடுதலை செய்யுமாறு சென்னையிலிருந்து உத்தரவிட்ட ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் திரு. கா. பத்மநாபன் லெபனானில் பயிற்சிபெற்றவர்.

நேற்றுமுன்தினமிரவு தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசுகையில் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

சர்வதேச தொலைபேசி
ரெலெக்ஸ் சேவை

இன்றுமுதல் யாழ் நகரில் ஆரம்பம்

24 மணித்தியால சேவை

யூனிக் கொம்யூனிக்கேசன்
சேர்விஸ்

28/18—1/1 மகாத்மா காந்தி றேட்

[சலுசலவுக்கு அண்மையில்]

யாழ்ப்பாணம்

தொலைபேசி: 22789 22791

ரெலெக்ஸ்: 22285 Perimr CE

(2253)

வரி விளம்பரம்

விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் நல்ல நிலையில் உள்ள வீட்டுடன் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 12 புது வீதி அத்தியடி, யாழ்ப்பாணம். (2369)

அரியாலை, கண்டிரோட்டிற்கு அருகாமையில் இருக்கும் கொட்டுக் கிணற்றடிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் தெற்காணி பரப்பு 17½ விற்பனைக்கு இருக்கிறது. தொடர்பு: S பொன்னுத்துரை, "கருணாவாசம்" அளவெட்டி வடக்கு, அளவெட்டி. 2272

Honda C. G 125 85 ஸ்ரீ தொடர்பு இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: 20/1 சங்கத்தானை லேன், டச்ரோட், சாவகச்சேரி. 2376

டீசல் வள்ள உரிமையாளர்களுக்கு தேவையான லிஸ்ரர், பேக்கின்ஸ், யன்மார் என்ஜின்கள், நொசல்ஸ் மற்றும் டீசல் பம்புகள் எம்மிடம் உண்டு. C A V. இன்ஜெக்ரர் ரெஸ்ரர் விற்பனைக்கு உண்டு. இராசா டீசல் என்ஜினியர்ஸ் 180, பருத்தித்துறை வீதி. யாழ்ப்பாணம். 2309

தேவை

எமது ஸ்தாபனத்துப் பொருட்களை விற்பனை செய்வதற்கும் அவற்றை பொலிதீன் உறையினுள் இட்டு அடைப்பதற்கும் ஆட்கள் தேவை. விண்ணப்பத்துடன் நேரில் வந்து மாலை 5 மணிக்கு முதல் சந்திக்கவும். சி. பத்மநாதன், Pan-organisation, 124, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 2380

வாடகைக்கு

Toyota Hiace (டீசல்) பிரயாணிகள் வான் பிரத்தியேக வாடகைக்கு அல்லது பொருள் விற்பனை (Sales) வாகன உபயோக வாடகைக்கு விடப்படும். தொடர்பு கொள்க. 82, பிரப்பங்குளம் ரோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் அல்லது 74 மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். 2374

யாழ். நகரில் நவீன சந்தைக்கு அருகாமையில் கஸ்தூரியார் வீதியில் எத்தகைய வியாபாரமும் செய்யக்கூடிய கடை நீண்டகால வாடகைக்கு உண்டு. விரும்புவோர் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 2375 "ஈழநாடு" யாழ்ப்பாணம். 2375

திருநெல்வேலி - பலாலி வீதியில் சகல வியாபாரத்திற்கும் வசதியான இடம் உண்டு. நேரில் தொடர்பு கொள்க. R. துரைசிங்கம், இருபாலை ரோட், கோண்டாவில். 2377

கல்வி

க. பொ. த. சாதாரணத்திற்கான பகல் நேர வகுப்பு ஆரம்பம்: 18 - 5 - 1984 SCIENCE CENTRE. (2358)

PHOTO STAT
பிரதிகளுக்கு
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

வகுப்புகள்

Spoken English. இலக்கண இலக்கியத்துடன் G. C. E. (O/L) பாடத்திட்டத்திற்கு அமைய புது வகுப்புகள் ஆரம்பம். 19 - 5 - 84, 8- AM (புதிய முறைகள் கையாளப்படுகின்றது) யாழ்ப்பாண கல்வி நிலையம். [illegible], அருகாமை [illegible]. 2378

முதலாவது பிறந்ததின வாழ்த்து

செல்வன் சதீஸ்வரன்

நீர்வேலி கந்தசாமி கோவில் அருகாமையைச் சேர்ந்த யோகானந்தா, உமாதேவி தம்பதிகளின் அருமைப் புதல்வன் செல்வன் சதீஸ்வரன் முதலாவது பிறந்ததினத்தை இன்று (16-05-84) வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். சதீஸ்வரனை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், மற்றும் ஏ. ஜி எலக்ரிக்கல்ஸ் ஸ்தாபனத்தார் அனைவரும் சகல கலைகளையும் பெற்று சிறப்புடன் வாழ்கவென வாழ்த்துகிறார்கள். 2355

சிரமதானம்

(மானிப்பாய்)

விழிசிட்டி சனசமூக நிலையத்தைச் சேர்ந்த 21 தொண்டர்கள் சென்ற மாதம் தெல்லிப்பழை தென்மேற்கிலுள்ள கொப்பிளாவடை மயானத்திலுள்ள பற்றைகள் பூண்டுகளை வெட்டிச் சுத்தம் செய்தனர். சனசமூக நிலையச் சார்பில் யாவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது. சனசமூக நிலையத் தலைவர் திரு. செ. சுப்பிரமணியம் தொண்டர்களின் ஒத்துழைப்பைப் பாராட்டி யாவருக்கும் நன்றி கூறினார்.

புதிய அதிபராக நியமனம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் புதிய அதிபராக திரு. க. மகேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இக்கல்லூரியின் உப அதிபராக நீண்ட காலம் கடமையாற்றியவராவார்.

இக்கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. பூ. வெற்றிவேலு சேவையிலிருந்து ஓய்வுபெற்றதையடுத்தே திரு மகேஸ்வரன் இப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

உடுவில்

திருக்குடும்ப மாதா உற்சவம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் மல்வம் திருக்குடும்ப மாதா தேவாலய வருடாந்த உற்சவம் கடந்த 11-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இம்மாதம் 20-ம் திகதி யாழ் ஆயர் வண. தியோகுப்பிள்ளை ஆண்டகை விசேஷ பூசைநடத்துவார். அதனைத் தொடர்ந்து உறுதி பூசலும், திருச்சொரூப சுற்றுப்பிரகாரமும் இடம்பெறவுள்ளது. [ஊ]

தமிழ் தின விழா

(மட்டக்களப்பு)

அகில இலங்கை ரீதியிலான பாடசாலை மட்டத்திலான தமிழ்தின விழா அக்டோபர் மாதம் முல்லைத்தீவு மாவட்டத்தில் கொண்டாட கல்வி அமைச்சு ஒழுங்குகள் செய்துள்ளதாக கல்வியமைச்சின் செயலாளரும் கல்வி மாஅதிபதியுமான திரு. ஈ. எல். விஜேமான்ன சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார்.

பிரிவுபசார விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கடந்த 35 வருடங்களாகப் பணிபுரிந்து இளைப்பாறிய அதிபர் திரு. பூ. வெற்றிவேலுவுக்குக் கல்லூரி மாணவ தலைவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை பிரிவுபசார விழாவினை நடாத்தினார்கள்.

கல்லூரி மாணவர் தலைவர் தி. முருகதாசன் தலைமையில் நடைபெற்ற இப்பிரிவுபசார விழாவில், கல்லூரி அதிபர் திரு. க. மகேஸ்வரன், கனிஷ்ட பிரிவு அதிபர் திரு. கே. சங்கரப்பிள்ளை, திரு. க. சந்திரசேகரம் உட்படப் பலர் உரையாற்றினர்.

மீனவர்கள் துன்புறுத்தல்

(சுழிபுரம்)

சுழிபுரம் மேற்கு புளியந்துறையில் மீன்பிடிக்கும் மீனவர்கள் காரைநகர் கடற்படையினரின் துன்புறுத்தலுக்குள்ளாகியுள்ளனர். இதனால் மீன்பிடித்தொழிலைச் செய்யமுடியாது மீன்பிடியாளர்கள் பெரும் தொல்லைக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த ஒரு வாரகாலமாக பல மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குச் செல்லவேயில்லை. கடற்படையினர் சில மீனவரைத் தாக்கி தொழில் கருவிகளைப் பழுதடையச் செய்ததுடன், சேதமும் விளைவித்துள்ளனர்.

நடப்புவருட நிர்வாகிகள்

(சுழிபுரம்)

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் வித்தியாலய அதிபர் திரு. இ. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் நடைபெற்ற புதுவருட உத்தியோகத்தர் தெரிவில் பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சி. [illegible], உப தலைவர்கள்: செ. வைத்திலிங்கம், இ. ஆறுமுகம், செயலாளர்: க. வாமதேவன், உப செயலாளர்: சி. ஆறுமுகம், பொருளாளர்: மு. இராசா, நிர்வாக சபை உறுப்பினர்கள்: சி. நடராசா, செ. சண்முகலிங்கம், செல்வி இ. தேசம்மா, க. சுந்தரமூர்த்தி, திருமதி ஈ. கைலாசபிள்ளை, மு. [illegible]துரை.

"எவருக்கும் அஞ்சாமல் தீர்ப்புக்கள் வழங்கியவர்"

மறைந்த நீதிபதிக்கு அஞ்சலி

(சுண்டிக்குளி)

அமரர் இராஜதுரை இலங்கையின் பல்வேறு பகுதிகளில் நீதிபதியாக கடமையாற்றியவர். 1958ம் ஆண்டு சட்டத்தரணியான இவர் நீதிபரிபாலனத்துக்கு ஆற்றியசேவையை இந்நாடு அறியும். ஒரு குறுகிய காலமே பருத்தித்துறையில் கடமையாற்றினார். இவர் நீதிபதியாக இருந்தபோது அரசாங்கத்துக்கோ அதிகாரத்துக்கோ அஞ்சாமல் சட்டரீதியாக நியாயப்படி தீர்ப்புக்கள் வழங்கினார்.

இவ்வாறு பருத்தித்துறை முன்னாள் நீதிபதி அமரர் எஸ். என். இராஜதுரையின் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய சட்டத்தரணி திரு வீ. செல்லத்தம்பி கூறினார்.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் நடந்த இக் கூட்டத்தில் திரு செல்லத்தம்பி மேலும் கூறியதாவது, "இவர் சிறீ இலக்கம் பதித்த கார்களில் தமிழ் சிறீ பொறித்து ஓடிய வாகனங்கள் மீது பொலிசார் வழக்குத் தொடர்ந்த இவரை எதிரிக்கூண்டில் ஏற்றியபோது தகுந்த காரணம் காட்டி விடுதலை செய்தது குறிப்பிடத்தக்கது. நீதித்துறையின் பாரம்பரியங்களுக்கு அமைய அச்சமின்றி சாட்சியங்களின் அடிப்படையில் வழக்குகளைத் தீர்த்தது மட்டுமன்றி தகுந்த காரணங்களுடன் அரசாங்கத்துக்கு எதிராகவும் தீர்ப்புக்களை வழங்கினார். அவற்றுக்கு எதிராக எவரும் மேன்முறையீடு செய்யவும் இல்லை" என்றார்.

பருத்தித்துறை மஜிஸ்திரேட் திரு சே. கணபதிப்பிள்ளை மாவட்ட நீதிபதி திரு ரீ. யோகநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அமரர் ராஜதுரை தொடர்பாக நடைபெற்ற இவ்வஞ்சலிக் கூட்ட நிரலை அவரது குடும்பத்துக்கு அனுப்பிவைக்க முடிவு செய்யப்பட்டது.

வங்கி ஊழியர் விசாரணை

(புலோலி)

வல்வெட்டித்துறை மக்கள் வங்கியின் ஊழியரொருவர் இராணுவத்தினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

விசாரணையின் பின்னர் அன்றைய தினமே திரு ஜெயச்சந்திரன் விடுதலை செய்யப்பட்டார்.

மீண்டும் புதிய பிரிவுகள்

- ★ TELEX OPERATERS
- ★ ELECTRICAL WIRING
- ★ DIPLOMA IN DRAUGHTSMANSHIP
- ★ DIPLOMA IN QUANTITY SURVEYING
- ★ RADIO T. V. and ELECTRONICS
- ★ E. C. E. (C. E. I.) PART - I and II

செய்முறை, நூல்நிலையம், நிரந்தர விரிவுரையாளர்கள்
போன்ற அனைத்து வசதிகளையும் உடைய
ஒரே ஸ்தாபனம்

ஆரம்பம்: 19-5-84 காலை 9·00 மணி

விபரங்களுக்கு:
FINANCIAL ASSOCIATION
402 1/2, K. K S ROAD JAFFNA.
(சிவன்கோவிலடி) (2373)

ஸ்ருடியோ உரிமையாளர்களே!
கலர் படப்பிடிப்பாளர்களே!!

உங்கள் கலர் பிலிம் சுருள் எதுவானாலும்
5 தினங்களில் கொம்பியூட்டர் முறையில்
பதிவு செய்ய

QUICK PHOTO SERVICES

- ★ DEVELOPING
  முற்றிலும் இலவசம்
- ★ இலவச RE - PRINT
- ★ ஸ்ருடியோக்களுக்கு
  விசேட கழிவு
- ★ போஸ்காட் அளவு படம்
  7 ரூபா மட்டுமே
- ★ 7''x5'', 10''x8'', 10''x12''
  20''x24'' அளவு
  ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

யாழ்ப்பாணத்தில்

1. பிரபா போட்டோ
   108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
2. ஐவ்று வீடியோ சென்றர்
   6, விக்ரோறியா ரோட், யாழ்ப்பாணம்.

மேலதிக விபரங்களுக்கு:
S. BAVAN
QUICK PHOTO SERVICES
AMPANAI, TELLIPPALAI.
(2379)

லாஸ்ஏஞ்சலஸ் ஒலிம்பிக்:

"பாதுகாப்பில்லை' என்றசோவியத்தின் கூற்றில் உண்மை இல்லை!"

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஷுல்ஸ் கருத்து!

வாஷிங்டன், மே. 15

"சோவியத் வீரர்களுக்கு லாஸ்ஏஞ்சலீஸ் ஒலிம்பிக் பந்தயங்களில் போதியளவு பாதுகாப்பு இல்லை என்று சோவியத்யூனியன் கூறியிருப்பது ஏற்றுக் கொள்ள முடியாதது. அக் கூற்றில் எவ்வித உண்மையுமில்லை" என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு.ஜோர்ஜ்ஷூல்ஸ் தெரிவித்துள்ளார்.

சோவியத் ஒலிம்பிக் பகிஷ்கரிப்புக் குறித்து கருத்துவெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது: ஒலிம்பிக் போட்டிகளை பகிஷ்கரிப்பது என்ற முடிவை சோவியத்யூனியன் மறுபரிசீலனை செய்யுமென்பது சந்தேகமே.

"சோவியத்யூனியன் அதன் ஒலிம்பிக் வீரர்களுக்கு லாஸ் ஏஞ்சலீஸில் போதியளவு பாதுகாப்பில்லை என்று தெரிவித்துள்ளது. ஆனால் அது ஒலிம்பிக் பந்தயங்களை பகிஷ்கரித்திருப்பதற்கான காரணம் இதுவல்ல.

லாஸ்ஏஞ்சலீஸில் சோவியத் வீரர்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படும். அவர்கள் ஒலிம்பிக் பந்தயங்களில் பங்குபற்றச் சம்மதித்தால் அவர்களை நாம் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்போம்" என்றார்.

இதேவேளை "ஒலிம்பிக் தீப்பந்தம்" நேற்று வாஷிங்டனில் வெள்ளைமாளிகையைக் கடந்து கொண்டு செல்லப்பட்டது. அதிபர் திரு றீகன் அப்போது அதனை வரவேற்று வழியனுப்பி வைத்தார். நியூயோர்க் நகரிலிருந்து 9 ஆயிரம் மைல்கள் தூரத்தைக்கடந்து லாஸ் ஏஞ்சலீஸ் நகருக்கு இத் தீப்பந்தம் கொண்டு செல்லப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க சோவியத்யூனியனின் ஒலிம்பிக்பகிஷ்கரிப்புடன் ஆப்கானிஸ்தானும் சேர்ந்து கொண்டுள்ளது. நேற்று உத்தியோகபூர்வமாக காபூலிலிருந்து இப்பகிஷ்கரிப்பு பற்றிக் குறிப்பிடப்பட்டது. (இ)

வருடமொன்றுக்கு உங்கள் மூலதனத்துக்கு
26% தொடக்கம் 30% வரை
வட்டி பெற்றுக்கொள்ளுங்கள்
குறைந்த தொகை ரூபாய் ஆயிரம் (ரூபா 1000/-)
எந்நேரமும் அறிவித்தலின் பின்
முழுப் பணத்தையும் திருப்பிப் பெறலாம்.
விபரங்களுக்கு:
JAFFNA PROPERTY TRADES LTD.
3, நவீன சந்தை, (மேல் மாடி) யாழ்ப்பாணம்.
போன்: 23698

Elephant Brand
nectar
Elephant Brand
BARLEY WATER
RJA - 1829
அருந்துங்கள்
தெம்பூட்டும் மதுரமான
ஒரேஞ் பார்லி
நெக்டோ
தரமுயர்ந்த இரு
யானைமார்க்
குளிர் பானங்கள்
CCS
வ. மா. வர்த்த 2/1
எலிஃபன்ட்
ஹவுஸ்

அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

(வவுனியா)

வவுனியா மாவட்ட அபிவிருத்தி சபைக்கென 25 லட்சம் ரூபா அரசினால் வழங்கப்பட்டிருந்தது. இப்பணம் முக்கிய அபிவிருத்தி பணிகளுக்கு செலவிடப்படவுள்ளது.

பெரும் தெருக்கள் பராமரிப்புச் செலவுக்கு 14 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், கிராமப்புற குளங்கள் திருத்துவதற்கு ஒரு லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என வவுனியா உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. பி. சோமநாதன் தெரிவித்தார்.

ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் செலவிடப்பட வேண்டிய திட்டம் தொடர்பான விபரத்தினை வவுனியா உள்ளூராட்சி திணைக்களம் வெளியிட்டுள்ளது.

வங்கி நடவடிக்கையை

அதிகரிக்கக் கோரிக்கை

(சாவகச்சேரி)

"சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையில் தற்பொழுது நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஒரு மணித்தியால வியாபார நேரத்தினை மேலும் ஒரு மணித்தியாலம் அதிகரித்து வங்கி வாடிக்கையாளர்களுக்கு உதவிபுரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும்".

இவ்வாறான கோரிக்கையை சாவகச்சேரி நவீனசந்தை வர்த்தகர் சங்கம் சாவகச்சேரி இலங்கை வங்கி முகாமையாளரிடம் விடுத்துள்ளது.

வங்கியில் தினமும் ஒரு மணித்தியாலம் மட்டும் வேலைசெய்வதால் தூர இடங்களில் இருந்து வருகின்ற பொதுமக்கள் மிகவும் சிரமப்படுவதாகவும், அத்துடன் நவீன சந்தை வர்த்தகர்களின் வசதி கருதியும் இம்மாற்றத்தினை உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும் என வர்த்தகர் சங்கத்தின் செயலாளர் திரு வா. நவரத்தினம் சங்கத்தின் சார்பில் வேண்டியுள்ளார்.

'வித்தி'

மணிவிழாவில் ஏ. ரி. யின் நூல்

(மாவிட்டபுரம்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் வரும் 27ஆம் திகதி யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் மணிவிழாவில், கலைஞர் ஏ. ரி. பொன்னுத்துரை எழுதிய 'அரங்கு கண்ட துணைவேந்தர்' என்ற அவர் பற்றிய நூல் வெளியிடப்படும்.

தென்னாபிரிக்கா டேர்பனில்

ஆபிரிக்க தேசியகாங்கிரஸின் ராக்கெட் தாக்குதல்!

கேப்டவுன், மே 15

தென்னாபிரிக்காவில் டேர்பன் நகரில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமொன்றின் மீது ராக்கெட் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இத்தாக்குதலுக்குத் தாமே பொறுப்பென்று ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் இயக்கம் தெரிவித்துள்ளது.

இந்த இயக்கமே தென்னாபிரிக்க கறுப்பர்களின் இனவிடுதலைக்காகப்போராடிவரும் பிரதான இயக்கமாகும்.

இத்தாக்குதலின்போது பல ராக்கெட் குண்டுகள் உபயோகிக்கப்பட்டனவென்று கூறப்பட்டது. பாதுகாப்புப்படைகள் இச் சம்பவத்தின் போது நடத்திய பதில்தாக்குதலொன்றில் ஏழுபேர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

மதுரையில்முதலாவதுதிறந்த இருதய சத்திரசிகிச்சை

மதுரை, மே 15

மதுரை ராஜாஜி அரசினர் மருத்துவமனையில் முதலாவது திறந்த இருதயசத்திரசிகிச்சை இடம்பெற்றது.

இச்சிகிச்சை சென்னைக்கு வெளியே இடம்பெற்ற முதலாவது பெரும் இருதயசத்திர சிகிச்சையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ஆண்டப்பன் தலைமையில் ஆறு வைத்தியநிபுணர்கள் பெண் ஒருவரில் இச் சிகிச்சையை மேற்கொண்டனர்.

அப்பெண்ணின் இருதய வலது இடது அறைகளின் நடுவே துவாரமொன்று அவரின் பிறப்பிலிருந்து காணப்பட்டது. இதனால் சுத்த இரத்தம், அசுத்த இரத்தம் ஆகியன இவரில் ஒன்றுடன் ஒன்று கலந்துவந்தன.

டாக்டர் ஆண்டப்பன் தலைமையிலான குழு இத்துவாரத்தை அடைத்து தமது சிகிச்சையை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது.

சுமார் ஆறு லட்சம் ரூபா பெறுமதியான கருவிகள் கொண்டு இச் சிகிச்சை நிறைவேற்றப்பட்டது. எதிர்காலத்தில் ஒவ்வொருமாதமும் இது போன்ற சிக்கலான சிகிச்சைகளை சென்னைக்கு வெளியே மதுரையிலும் நடத்தமுடியுமென்று கூறப்பட்டது. (இ)

கிளிநொச்சி மாவட்டத்தில்

கிராமியக் குளங்கள் புனரமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பல கிராமியக்குளங்கள் குளபுனரமைப்பு திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்டு வருவதாக நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் திரு. கே. குமாரசாமி தெரிவித்துள்ளார்.

குளபுனரமைப்புத்திட்டம் 1981ம் ஆண்டு இலங்கையில் உருவாக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஐந்து குளங்கள் புனரமைப்புவேலைகள் இத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எட்டுலட்சம் ரூபா இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இக்குளவேலைகள் பூர்த்தியாக்கப்பட்டதும் இப்பகுதியில் எழுபது ஏக்கர் காணிக்கு நீர்ப்பாய்ச்ச வசதிகிடைக்கும் என்றும் நீர்ப்பாசன பொறியியலாளர் குமாரசாமி தெரிவித்தார்.

கிராமியக்குள சகாயத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே கிளிநொச்சி மாவட்டத்தில் சந்தன் குளம், நீலிக்குளம், உப்புக்குளம் போன்ற குளங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

அடையாள அட்டை கிடைக்கவில்லை

(வவுனியா)

வவுனியாவில் குடியேறியுள்ள இந்திய வம்சாவளியினர் பலருக்கு இன்னமும் தேசிய அடையாள அட்டை கிடைக்கவில்லையாம்.

197[illegible]-ம் ஆண்டு இதற்கு விண்ணப்பித்தவர்களுக்கு கூட இன்னமும் அடையாள அட்டை வந்து சேரவில்லை என இவர்களில் இ. தொ. கா. பிரமுகர் ஒருவர் வவுனியா கச்சேரி உயர் அதிகாரி ஒருவரின் கவனத்துக்கு குறித்த விடயத்தினை கொண்டு வந்துள்ளார்.

ஆயுதப்படையினரால் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் கடும் விசாரணைக்குட்படுத்தப்படுவது தெரிந்ததே.

கும்பாபிஷேகம்

(சுழிபுரம்)

தொல்புரம்-கிழக்கு மடத்துவாசல் பிள்ளையார் கோயில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு, கும்பாபிஷேகம் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

இதுவரை கோயில் கும்பாபிஷேக நிதியாக ஐம்பதினாயிரம் ரூபா சேகரித்துள்ளனர்.

30 MAY 1984

மணிவாக்கு

இடுக்கண் படினும் இளிவந்தசெய்யார்
நடுக்கற்ற காட்சியவர்

—குறள்

நமது நோக்கு

இரு நகரின் ஒருகதை

அமெரிக்க தம்பதிகள் கடத்தல் நாடகத்தின் இன்றைய நிலை நாகரிக சமுதாயம் இன்று உலகில் உயிர் வாழ்வதை நிரூபித்துவிட்டது.

இதனைவிட வேறெந்த விமானக் கடத்தல்களிலும் இறங்குவது [illegible] குருடரின் விவேகத்தையே காட்டுகின்றது.

நிற்க, கடந்த இருதினங்களில் நடந்த வெசாக் கொண்டாட்டத்தை இத் துன்பசம்பவம் ஓரளவிற்கு குழப்பியிருக்குமென யூகிக்கலாம். யாழ்ப்பாணம் சில காலமாக சுடுகாடாகவுள்ளது

அரசாங்கம் மட்டுமல்ல மக்கள் அனைவரும் இச்சம்பவம் பற்றிக் கவலையில் நிலையில் இருந்ததை நாம் காணக்கூடியதாகவிருந்தது. இறுதிவரைக்கும் செய்தி கேட்கும் வரைக்கும் அனைத்து [illegible] அந்தரப்பட்ட நிலையிலிருந்ததென்று குறிப்பிடுதல் மிகையாகாது.

அவ் தம்பதிகள் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்ற செய்தி அவர்களின் பெற்றோர் உள்ளத்தை எவ்வாறு உருக்கியிருக்குமென்பதை உணரவல்லோர் அனைவரும் மனிதாபிமானத்துக்கு உறுதுணையாக இருப்பவரேயாவர்.

இத்தகைய சம்பவம் தனிப்பட்டதொன்றல்ல; கடத்தல் (மக்களின் உயிர்களை) தானும் நாட்டுக்குப் புதிதல்ல; மற்றும் பாரிய குற்றங்கள் நாட்டில் பெருகிவிட்டன. இவற்றிற்கெல்லாம் சட்டங்களும், அவற்றிற்கேற்ற அரசியல்சாசன மாற்றங்களும் ஒரு நொடிப் பொழுதில் கொண்டுவரும் பலம் பாராளுமன்றத்துக்கு உண்டு.

இவற்றால் உருப்படியான சமுதாய மாற்றம் ஏற்படுமா?

ஆடிக் கலவரத்தில் கொழும்பு மாநகரம் என்ன கோலம் கொண்டிருந்தது? நாட்டின் மற்றைய இடங்களில் நடந்ததென்ன? இவை யாவும் சர்வதேசரீதியில் நன்றாகப் பதியப்பட்டுள்ளன! மகாவலிகங்கை நீர் முழுவதும் இவற்றை அழிக்கமாட்டாது.

இது பற்றி ஏதும் விசாரணை, இதனை எவ்வாறு தடைசெய்வது பற்றி ஏதேனும் பிரயத்தனம் இன்றுவரைக்கும் எடுக்கப்பட்டதா? சந்தேகம்.

இதன் விளைவு என்னவாகலாம்? நாட்டில் அக்கிரமம் நாளுக்குநாள் வளர்வதற்கு இது ஏதுவாகுமென்பதை யாரும் ஆட்சேபிக்க முடியுமா?

எனவே நாடு நாடகமாயிருப்பதற்கும், இன்றைய முட்டுக்கட்டை இதற்கு அவசியமான சமுதாய ஒருமைப்பாடு குன்றும் நிலை; ஒருமைப்பாடென்னும் போது, அரசியல் விளக்கம் எவரும் கொடுக்கவேண்டியதில்லை. 'ஒருமைப்பாடாக' இருக்கும் இன்றைய இழிநிலையையே நாம் பொதுவாகக் கருதுகிறோம்.

புத்தபிரானின் பெயரால் கொழும்பில் அலங்காரப் பந்தல்; யாழ்ப்பாணத்தில் இன்று பிணப்பந்தல்.

இதைத்தான் டிக்கின்ஸ் என்னும் ஆங்கிலத்தின் அப்பெரும் எழுத்தாளர் (Charles Dickens) இருநகரின் ஒரு கதை எழுதியவரென [illegible].

தொண்டர் தம் பெருமை

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடி பல துன்பச் சம்பவங்களுக்கு இலக்காவது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் அங்கு நடைபெற்ற மினிபஸ் விபத்து அவ்வூர் மக்களின் சமூக உணர்வை எடுத்துரைக்கிறது.

எந்த மினிபஸ், எந்நேரத்தில் எவருடைய வீட்டுக்குள் அல்லது கடைக்குள் புகுமென்று இன்று எவரும் சொல்வதற்கில்லை.

ஒருகாலத்தில் யாழ்ப்பாணத்துக்கு 'மினிபஸ்' பெரும் ஆபத்தாகவிருப்பதாக பலர் கருதினார்கள். அந்தப்பயம் இன்று சற்றே நீங்கிவிட்டது. இன்று இலங்கைஇராணுவம், மினிபஸ், யாழ். நகர்வீதிகள், இம்மூன்றும் ஒன்றுடன் ஒன்று போட்டியோடுகின்றன. வடபகுதி தீவிரவாத இளைஞர்களை இந்த லிஸ்டில் விட்டுவிட்டதற்குக் காரணம் அவர்களின் 'தீர்ப்பு' தனிகள் நீதிமன்றத்துக்கு அமைந்ததென்பதால் அதை நாம் ஆதரிக்கவில்லை. முன்னறிவித்தல் உள்ளதால் அதுவேறுபட்டது.

அதுஎவ்வாறாயினும் நாச்சிமார் கோவிலடி 'அம்பாள் கபே' முதலாளியின் மரணமும், அவருடைய மனைவியின் தற்கொலையும் இன்றைய மனித உயிர் மலிவு காலத்திலும், பெருங் கொடுமை என்றுதான் கருதவேண்டும்.

அப்பகுதி இளைஞர்கள் மரணச்சடங்கிலன்று மினிபஸ் ஓட்டத்தை தடைசெய்ததும், கையில் புகுந்த மினிபஸ்ஸை கடவே எடுத்துச்செல்வதை மக்கள் தடைசெய்ததும் சமூக உணர்வின் சிறந்த நிலையெனக் கருதுகிறோம்.

இவ்வித தொண்டு சமூகத்துக்கு முரண்பட்டதல்ல. ஊர்மக்களே சட்டத்துக்கு உயிர்கொடுப்பவர்கள். மக்களின் சம்மதத்தைப்பெறாத சட்டங்கள் அமுலிலிருப்பதும், சட்டம் அவமதிக்கப்படுவதற்குரிய நீதியின்றி தண்டனை உதாசீனம் செய்யப்படுவதும் இன்று இந்த சட்ட ஆட்சி அருகிவருவதின் ரகசியங்கள்.

இந்நிலையில் சமூகத் தொண்டர்கள், கிராமத்தை ஊரைப் பாதுகாக்கும் செயல்கள், காடைத்தனத்துக்கு உதவியாற்றி கெடுதி செய்து கொள்ளலாகாது.

திருக்கேதீச்சர ஆலயம் பெரும் கலைக்கூடமாகும் காலம் தொலைவில் இல்லை!

திருக்கேதீச்சரத்திலிருந்து நமது சிறப்பு நிருபர்
தி. பொன்னம்பலவாணர்

பாலாவிக்கரையினிலே — 6

திருக்கேதீச்சர கோபுர வாசலினூடாக ஆலயத்தினுள் சென்றதும் ஒரு பெரும் கலைக்கூடமாக இவ்வாலய உட்பிரகாரம் காட்சிதரும் காலம் தொலைவில் இல்லை

தூண்களில் சிற்பங்கள்

நான்கு தூண்களில் நான்கு சமயாச்சாரியார்களின் வரலாற்றுச் சிற்பங்கள் இடம்பெறவுள்ளன. அம்பாளுக்கு முன்புள்ள மண்டபத்தில் கொடிப்பெண்கள் இருவர் இரு தூண்களில் இடம்பெறவுள்ளனர். தென்னிந்தியாவிலேயே கொடிப்பெண்கள் சிற்பத்திற்கு புகழ்பெற்ற திருப்புவனம் என்னும் தலத்திலுள்ள கொடிப்பெண்களைப் போன்ற கலைவண்ணத்துடன்தான் கேதீச்சரத்துக்கான தூண்களை அமைக்கிறார்கள். கேதீச்சரத்தின் புராண வரலாற்றிலும் சரித்திர வரலாற்றிலும் தொடர்புடையவர்களான மண்டோதரி, மயன், கேது, நாயன்மார் முதலியவர்கள் இடம்பெறும்படியான சிற்பத்தூண்களும் கூட தமிழ்நாட்டில் உருவாக்கப்படுகின்றன.

இப்படியானசுமார் 76 தூண்கள் உருவாவதாகவும் இத்தூண்களின் பெரும்பகுதி வேலைகள் நிறைவேறியுள்ளன வென்றும் கேதீச்சரத்திருப்பணிச்சபைக்காரியதரிசி திரு நமசிவாயம் கூறுகின்றார்.

திருக்கேதீச்சரம் பெருமானின் ஆலயப் பணிகளுக்கு தமிழர்கள் மட்டுமன்றி இந்தியாவிலுள்ள பல தேவஸ்தானங்களும் பணம் உதவி புரிகின்றன.

தென்னிந்திய ஆலயங்கள் நிதிஉதவி

ஆந்திர மாநிலத்திலுள்ள திருப்பதி தேவஸ்தானம் மட்டும் ஒருலட்சத்து அறுபதினாயிரம் ரூபாவை வழங்கியிருக்கின்றது. பாண்டிச்சேரி மாநில அரசு 15 ஆயிரம் ரூபா வழங்கியிருக்கின்றது.

தமிழ்நாட்டிலுள்ள வசதி படைத்த பெருந்தலங்களான பழனி, திருச்செந்தூர், திருத்தணி, மதுரை, இராமேஸ்வரம், ஆகிய தலங்கள் ஒவ்வொன்றும் கேதீச்சர ஆலயப்பணிக்கு 25 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளன. இவ்வளவுபணம் கிடைத்தும் தொடங்கிய இப்பணியை நிறைவேற்ற இந்தியாவில் 80 ஆயிரம் ரூபாவும் இலங்கையில் 2 லட்சம் ரூபாவும் தேவைப்படுகின்றதாகத் தெரிகின்றது.

காலம் தொலைவில் இல்லை

கேதீச்சர ஆலயத்திற்குச் செல்வோர் அங்குள்ள [illegible] லிங்கத்தையும், பாலாவித் தீர்த்தத்தையும், மயில்கள் நடமாடுவதையும், கோவிலைச் சூழவுள்ள பொன்னொச்சி மரங்களின் புதுமையையும் கண்டு உவந்து தம்மையே மறந்து பரவசப்படுவது போன்று ஆலயத்தில் அமையவிருக்கும் கலைச்சிறப்பிலும் கேதீச்சர நாதனின் மகிமைகளைக் கண்டு லயிக்கும் காலம் அதிக தூரத்தில் இல்லை

நகரத்தார்பணி

தமிழ் நாட்டிலும் மட்டுமன்றி தம் நாட்டிலும் சிவபுண்ணியம், திருப்பணிகள் செய்தற்கு உதாரணமாயிருப்பவர்கள் நகரத்தார் என்றழைக்கப்படும் வைசியர்களே. ஏனோ [illegible] பெருந்தொகை பணத்தைத் திருப்பணிக்குச் செலவு செய்வது இவர்களின் தனிச்சிறப்பாகும். இவர்கள் தமக்குப் பத்துபிள்ளைகள் இருந்தால் தம் உழைப்பைப் பதினொன்றாக வகுத்து தம் பிள்ளைகளைப் போஷித்துவளர்ப்பது போன்று ஒருபங்கைத் தாம் திருப்பணி செய்யும் ஆலயத்திற்கு அர்ப்பணிப்பர். நகரத்தார்களைப் போன்று சைவசமயிகள் திருப்பணியில் அக்கறை காட்டவேண்டும். சிவபெருமானைத் தேவதேவன் மகாதேவன் அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகன் என்று மட்டும் கருதாமல் தம் ஆன்மநாயகன் என்று கண்டு சிவப்பணியில் ஆன்மத்திருப்பணியில் முன்வர

(15-ம் பக்கம் பார்க்க)

இந்தவீதிகள் அதிகாரிகளின் கண்களில் படவேண்டும்

மக்கள் கருத்து

இலங்கையில் கடந்த காலங்களில் போக்குவரத்துக்கென பாவிக்கப்பட்டு வந்த பிரதான வீதிகளே இன்றும் அதிகமாகப் பாவிக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் இன்று பிரதேசங்களின் முன்னேற்றங்களும், போக்குவரத்தின் தேவைகளும் விரிவடைந்துவிட்டன. இந்த நிலையில் தென்னிலங்கையை எடுத்துக்கொண்டால் புதிய பாதைகள், புதிய வீதிகள் மக்களின் தேவைக்கு ஏற்றவாறு, போக்குவரத்து வசதியை முன்னிட்டு திறக்கப்பட்டும், விஸ்தரிக்கப்பட்டும் வருகின்றன. வடக்கைப் பொறுத்தமட்டில் பல்லாண்டுகாலமாக வீதிகளுக்கு வருடாவருடம் கல்லுப்போடுவதும், தார் வார்ப்பதும், மண்ணைப்போடுவதும், பள்ளமாக உள்ள குழிகளுக்குமண் நிரப்புவதுமே வேலையாக இருக்கின்றது. இப்படியான சிறு ஒதுக்கீடுகள் மட்டும்தான் வடக்கிற்கு ஒதுக்கப்படுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

வடபகுதியில் உள்ள பொது மக்களுக்கு அதிமுக்கியமானவைக்குரிய வீதிகள் புதிதாக அமைப்பதில் எவருமே அக்கறை இருப்பதாகத்தெரியவில்லை. போக்குவரத்து வசதிகள் நாட்டின் பொருளாதார உயர்வுக்கும் அதிமுக்கியமானதொன்றாகின்றன.

போக்குவரத்து அபிவிருத்தியும், மக்கள் அபிவிருத்திக்கும், கிராமங்களின் விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்கும் ஏற்ப வீதிகளும் விஸ்தரிக்கப்படவேண்டியது முக்கியமான தொன்றாகும்.

இளைஞர்களும், அதிகாரிகளும், உத்தியோகத்தர்களும் வாகனங்களும் அதிகரிப்பதனால் மட்டும் மக்களின் தேவைகள் பூரணத்துவமடைய முடியாது. வீதிகளும் முக்கியமானவை என்பதை அரச அதிகாரிகள் உணரவேண்டும்.

உதாரணமாக உணவுப் பொருட்களை உற்பத்திசெய்யும் ஒரு விவசாயி தனது கிராமத்திலிருந்து அடுத்த கிராமத்திற்கோ, அல்லது நகரத்திற்கோ பொருட்களைக் கொண்டுசெல்ல தனது தோட்டத்திலிருந்து, அல்லது தனது வீட்டிலிருந்து பிரதான வீதி நோக்கி இரண்டு மைல் சுமை [illegible] சென்று, அங்கு பஸ்வண்டிக்காக காத்துநின்று செல்ல சுமார் இரண்டு மணி நேரம் அவனது வாழ்க்கையில் வீணாகின்றது. இந்த நிலையில் மனித சக்தி நாட்டுக்கு எவ்வளவு தூரம் பிரயோசனப்படுகிறது என்பதை உணரவேண்டும். இதுமட்டுமல்ல இப்படி அவனது நேரமும் முயற்சியும் வீண்விரயமாகும்போது அவன் எடுத்துச் செல்லும் உற்பத்திப் பொருளின் விலையும் இதனால் அதிகரிக்கலாம். இந்த நிலையிலும் பொருளாதார மாறுதல்களும் ஏற்படுவதை நாம் அவதானிக்கமுடிகிறது.

இந்த நிலை வடக்கு கிழக்குப் பகுதிகளில்தான் இருக்கிறது என்று துணிந்து கூறலாம். காரணம் இலங்கையின் ஏனைய பகுதிகளில் புதிய வீதிகளை அமைக்கும் முறைகள் மக்களின் வசதிகளுக்கும், தேவைகளுக்கும் ஏற்ப நவீனமயப் படுத்தப்பட்டுவருவதை அவதானிக்கமுடிகிறது!

உதாரணமாக வேலணையிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பண்டைய பிரதான வீதி குடிசனமற்ற வெறும் வனாந்தரத்தினூடாகச் செல்கின்றது. இவ்வீதி ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்ப்பாணம் வருவதற்கு வசதியாகப் பயன்படுத்தப்பட்ட வீதியாகும். அந்நியர் ஆட்சிக்காலத்தில் துறைமுகங்களை இணைக்கும் வீதிகளாகவே இவை அமைந்தன. ஆனால் வேலணை கிழக்கு, வேலணை சாட்டி, மண்கும்பான் வெள்ளைக்கடற்கரை பள்ளிவாசல், மண்கும்பான் [illegible] வாடாகச் செல்லும் [illegible]

(5-ம் பக்கம் பார்க்க)

"ஆலயங்கள் சமூக, சமயப் பணிகளிலும் ஈடுபடவேண்டும்"

(மாவிட்டபுரம்)

"ஆலயங்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டும் விளங்காமல் சமூக சமய பணிகளிலும் ஈடுபட வேண்டும். தமிழகத்திலுள்ள ஆலயங்கள் பல்வேறு அறப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. அதுபோல் நமது மத்தியிலுள்ள ஆலயங்களும் அறப்பணிகளில் ஈடுபாடு கொள்ள வேண்டும்."

இவ்வாறு மாவை ஆதீன வெளியீடான தேர்த்திரட்டு நூல் வெளியீட்டு விழாவில் கலந்து உரையாற்றிய செந்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கூறினார்.

மாவை ஆதீன மண்டபத்தில் வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர் திரு மு சிவராசா தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்:

'கிராமங்களின் வளர்ச்சிக்கும் கிராமரீதியில் சமய எழுச்சியை ஏற்படுத்தவும் அக்கிராமத்திலுள்ள ஆலயங்கள் வழி சமைக்க வேண்டும். இந்த வகையில் மாவை ஆதீனம் ஆற்றிவரும் பணிகள் பாராட்டக்குரியவை''

மாவை ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் தேர்த்திரட்டு நூலை வீமன்காமம் மகா வித்தியாலய மாணவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கிய வேளையில்:

'மாவை ஆதீனம் கடந்த 15 நூற்றாண்டு காலமாக ஈழநாட்டை அரசாண்ட 13 தமிழ் அரசர்களாலும் ஆதரிக்கப்பட்டு வந்தமையால் அவ்வப்போது சமய, கலை, கலாச்சார வளர்ச்சிக்குத் தகுதியான சேவைகளை செய்து வந்துள்ளது. இத்தகைய பணியை தொடர்ந்தும் நாம் ஆற்றி வருவோம்' என்று கூறினார்.

தரம் ஒன்றுக்கு பதவி உயர்வு

(கிளிநொச்சி)

இலங்கை நிர்வாக சேவை இரண்டாம் தரத்தில் இருந்த ஐந்து தமிழ் அதிகாரிகள் நிர்வாக சேவை முதலாம் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

பளை உதவி அரசாங்க அதிபர் திரு குருகவேல், யாழ் வீடமைப்புத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு இராசநாதன், மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் ஜனாப் மக்பூல், யாழ் தேர்தல் அதிகாரி திரு. அமிர்தசாகரன், திறைச்சேரியை சேர்ந்த திருமதி ச. திருஞானராசா ஆகியோரே நிர்வாக சேவை தரம் ஒன்றிற்கு தரம் உயர்த்தப்பட்டோராவார்கள்.

உங்கள்
தங்க நகைகளுக்குப்
பணம் தேவையா?

TFC

42 வருடகால
சேவை

த பினன்ஸ் கொம்பனி லிமிரெட்
249, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

விவசாயச் செய்கையைப் பாதித்த பூச்சி இனம்

(மாவிட்டபுரம்)

விவசாயிகளது விவசாயச் செய்கையை பெரிதும் பாதித்து வந்த புதிய பூச்சி இனம் குறித்து விவசாயப்பகுதியினர் நடத்திய ஆய்வின்படி அது "அடுப்புக்கால் மூட்டுப்பூச்சி" என கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வலி. வடக்குப் பகுதியில் கட்டுவன் ஏழாலை போன்ற பகுதிகளில் விவசாயிகளது தோட்டங்களில் புதிய பூச்சி இனம் ஒன்று காணப்படுவதாகவும் அது பாகல் தோட்டங்களை பெரிதும் பாதிப்பதாகவும் விவசாயிகள் புகார் தெரிவித்ததன் பேரில் கீரிமலை கமநலச் சேவை நிலைய உத்தியோகத்தர்கள் மேற்படி பூச்சி இனத்தில் சிலவற்றைப் பிடித்து திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வுக்காக வழங்கியிருந்தனர்.

யாழ். மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் திரு ச கிருஷ்ணபிள்ளை விவசாய உத்தியோகத்தர் திரு ஜெ. பரமானந்தம் ஆகியோர் இதுபற்றி ஆராய்ந்து மேற்படி பூச்சி "அடுப்புக்கால் மூட்டுப்பூச்சி" என கண்டு பிடித்துள்ளதுடன் இப்பூச்சி இனத்தை ஒழிக்க மொனகுரோட்டபொஸ் அல்லது 'அசோட்றின்' அல்லது 'நுவக்குரோன்' கிருமிநாசினிகளில் ஒரு அவுன்ஸ் 3 கலன் நீரில் கலந்து தெளிக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பாகல் தோட்டங்களையும் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

மன்னார் தொலைபேசிச் சேவை

தரமற்ற கேபிள்கள்

வேலைதெரியாத ஊழியர்கள்!

மாவட்ட அத்தியட்சகர் தகவல்

(மன்னார்)

மன்னார் மாவட்ட தொலைபேசி திணைக்களத்தில் வேலை தெரிந்த ஊழியர்கள் போதிய அளவு இல்லாததாலும் தரம் குறைந்த கேபிள்களும் இருப்பதாலுமே மன்னார் மாவட்ட தொலைபேசி சேவை சீர்கேடடைந்துள்ளது.

இவ்வாறு மன்னார் மாவட்ட தொலைத்தொடர்பு அத்தியட்சகர் திரு. வாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

மன்னார் தபால்நிலைய மேல் மாடியில் நடைபெற்ற தபால் நிலைய அறிவுறுத்தல்சபை கூட்டத்திலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

மன்னார் மாவட்டத்தில் நிலத்திற்கடியிலுள்ள கேபிள்கள் யாவும் 32வருட பழமைவாய்ந்தவையாகும். இவற்றை மாற்றி அமைக்க அரசு இணக்கம் தெரிவித்துள்ள போதிலும் இவ் வேலைகள் பூர்த்தியடைய 2வருடங்கள் செல்லும். மன்னார் மாவட்டத்தில் பயிற்றப்பட்ட தொலைபேசித் தொழிலாளர்கள் இல்லை. இதனால் வேலை தெரியாத ஊழியர்களை வைத்தே பல வேலைகளைச்செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது அனுராதபுரம் கொழும்பு போன்ற இடங்களிலிருந்து பயிற்றப்பட்ட ஊழியர்கள் தற்காலிகமாக வரவழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் உதவியுடன் மன்னார் மாவட்டத்தில் தொலைபேசி சேவையை இரண்டு வாரத்தில் சீர்செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன்." (கி)

திருக்கேதீசர

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். அப்படிச்செய்தால் நம்முன்னோர் செய்த பணிகள் நம்மை அதிஷ்டசாலிகளாக்கியது போல் நம்வழித்தோன்றல்களுக்கு நாம் தக்க கடமை புரிந்தவராவோம்.

(தொடரும்)

கிரமதானம் மூலம் வாய்க்கால் அமைப்பு

(மாவிட்டபுரம்)

முழங்காவில் பகுதியில் தேங்கிநிற்கும் வெள்ளத்தை அகற்றுவதற்காக முழங்காவில் படித்த வாலிபர் குழுவின் [illegible] திட்ட இளைஞர்களும், பொது மக்களும் சேர்ந்து 5 280 அடி நீளமான வாய்க்கால் ஒன்றை சிரமதான மூலம் அமைத்து வெள்ளத்தை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

நியமனம்

(மன்னார்)

விடத்தல்தீவு பிரசமோதய சபை தலைவராக பெரியமடு அல்மனார் மகா வித்தியாலய அதிபர் ஜனாப் ஏ சி. எம். கஃசூப் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

விடத்தல்தீவு முஸ்லீம் பகுதி கிராம அபிவிருத்திச் சபைத் தலைவரான இவர் யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவராகும். இவர் சிறந்த சமூக சேவையாளர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தவீதிகள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பிடி மண்டைதீவு பரவைக் கடல் ஊடாகச் மண்டைதீவு ஊடாக யாழ்ப்பாணத்தை அடையும் வீதியே உண்மையான பிரதான வீதியாகவும் மக்களுக்குப் பயனுள்ள வீதியாகவும் மாற்றவேண்டிய தொன்றாகும். இவ்வீதியே பொதுமக்கள் வசிப்பிடங்களையும், தோட்டங்களையும், பொது அலுவலகங்களையும் ஊடறுத்துச்செல்லும் வீதியாகும்.

மக்கள் போக்கு வரத்துச் செய்யும் இப் பிரதான வீதி சீராகப் பூரணத்துவமடையாததால் இவ்வீதியால் முறையாக வாகனப் போக்கு வரத்துச்செய்யமுடியாதநிலை இருந்துவருகிறது.

இப்பிரதானவீதி பூரணமாகத் திருத்தப்படுமாயின் வேலணையிலிருந்து மண்கும்பான், அல்லைப்பிட்டி மண்டைதீவு ஊடாக புதிய பஸ்சேவை நடத்த வசதியேற்படும். இதன் மூலம் கடற்றொழிலாளர்கள், விவசாயிகள், பாடசாலை மாணவ மாணவிகள் ஏனைய பொதுமக்கள் பயன்பெற முடியும். இத்துடன் நில்லாது வேலணையிலிருந்து மண்டைதீவு செல்லும் தூரம் ஐந்து மைல்களால் குறையும். மண்டைதீவு மக்கள் இரண்டு பஸ் எடுத்து வேலணை செல்ல வேண்டிய நிலை ஏற்பட முடியாது. இவ்வீதி பூரணமாகினால் விவசாய நிலங்களுக்கு கடல் நீர் செல்லுதல், உவர் நிலங்கள் நல்ல நிலங்களாக மாறுதல் ஆகிய நன்மைகளும் ஏற்படுகின்றது. கிராமங்களை ஊடறுத்துச் செல்லும் இந்த பிரதான வீதியை பூரணத்துவப் படுத்தாததினால் சுமார் பத்தாயிரத்துக்குமதிகமான விவசாயிகள் பாதிப்படைகிறார்கள்.

பெருந்தெருக்கள் திணைக்களம் [illegible] இவை மக்கள் உதவியுடன் நிறைவேற்ற முன்வந்தது போல இந்த முக்கிய வீதியை பூரணப்படுத்த புனரமைக்க முயலுவார்களா?

சு. தருமலிங்கம்
மண்கும்பான் கிழக்கு.

●

அண்மைய பெருமழை பெருவெள்ளத்தின் பின்னர் யாழ்ப்பாணப் பகுதிகளிலுள்ள எல்லாப் பிரதான பாதைகளும் குன்றும் குழியுமாகச் சிதைந்து கிடக்கின்றன. இதனால் போக்குவரத்துக்குப் பெரும் இடைஞ்சலாக இருக்கிறது. இடைக்கிடை சிற்சில இடங்களில் திருத்த வேலைகள் நடைபெற்றாலும் இவை முறைப்படி நடைபெறுவதாகத் தெரியவில்லை. பாதைகளிலுள்ள பெருங்குழிகளில் புழுதி மண்ணைப்போட்டு தார் தெளிக்கப்படுகிறது. இது எந்த ஊரிலும் இல்லாத அற்புதமாகும். இதனால் மழைகாலத்தில் சேறும் சகதியும், வெயில் காலத்தில் புழுதிமண்டலமுமாகப் பாதைகள் இருக்குமே தவிர மக்களுக்கு எதுவித நன்மையும் பயக்காது என்பதைச் சம்பந்தப்பட்டோர் உணரவேண்டும்.

இரா. சுப்பிரமணியதாஸ்
பொதுச் செயலாளர்
[illegible]

பாராட்டு விழா

(புலோலி)

கமநலச்சேவைத் திணைக்களப் பெரும்பாக உத்தியோகத்தராக 33 வருடங்கள் கடமையாற்றி இளைப்பாறிச் செல்லும் பெரும்பாக உத்தியோகத்தர் திரு. எஸ் படிகலிங்கத்திற்கு யாழ் மாவட்ட கமநலச்சேவை உதவி ஆணையாளர் திரு. செ. பரமலிங்கம் தலைமையில் நல்லூர் கமநலச் சேவை நிலையத்தில் சேவை நலம் பாராட்டுவிழா நடத்தப்பட்டது.

யாழ் மாவட்ட பெரும்பாக உத்தியோகத்தர்களால் நடத்தப்பட்ட இச்சேவைநலம் பாராட்டு விழாவில் பெரும்பாக உத்தியோகத்தர்களான திரு. என் பரமசிவராசா, திரு. எஸ் குழந்தைவேலு, திரு. இராசையா ஆகியோர் திரு. படிகலிங்கத்தின் சேவைகளைப் பாராட்டி உரையாற்றினார்கள்.

கூட்டுறவு முறையில் கிராமிய அபிவிருத்தி

(புலோலி)

"கூட்டுறவுத்துறை மூலம் கிராமிய அபிவிருத்தியை மேம்படுத்த முடியும். கூட்டுறவுத் துறையில் பெண்களும் ஈடுபடவேண்டும். இதற்கு கூட்டுறவுச்சங்க மகளிர் குழுக்கள் வழிவகுக்கின்றன''.

இவ்வாறு வலிகிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தம்பாலை கூட்டுறவு மகளிர் குழு அங்குரார்ப்பணப்பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய சமாச இணைக்குநர் சபைத்தலைவர் திரு. தி கனகநாதன் குறிப்பிட்டார். கூட்டத்திற்கு திருமதி தி க. நாராயணன் தலைமை வகித்தார்.

சங்க கல்வி உத்தியோகத்தர் திரு எஸ். ஜெயசந்திரபோஸ் உரையாற்றுகையில் கிராமப் பகுதிகளை அபிவிருத்தியடையச் செய்வதில் கூட்டுறவு மகளிர் குழுக்கள் முக்கிய பங்கெடுக்கவேண்டுமென்றும் கூட்டுறவு-பாவனையாளர் பாதுகாப்பு, போஷாக்கும் குடும்ப நலனும், வருவாயைப் பெருக்கும் வழிவகைகள் சேமிப்பு என்பன கூட்டுறவு மகளிர் குழுக்களின் முக்கிய நோக்கங்களாகும்'' என்றும் கூறினார்.

வித்தியானந்தன் மணிவிழா

(மாவிட்டபுரம்)

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தனின் மணிவிழா நாளை மறுதினம் 18-ந் திகதி வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். [illegible] தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் மாவை ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள், கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தா பிரமஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள், தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய தலைவி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. ஐ. பி. துரைரத்தினம், இலக்கண வித்தகர் இ. நமசிவாயம், கலைநிதி அ. சண்முகதாஸ், கவிஞர் இ. முருகையன் ஆகியோரது பாராட்டுரைகளும் இடம்பெறும்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு த. சண்முகசுந்தரம் எழுதிய "[illegible]'' என்னும் நூல் வெளியீடும் இவ்விழாவில் இடம்பெறும். திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) நூலை அறிமுகம் செய்துவைப்பார். பேராசிரியர் திரு சு. வித்தியானந்தன் ஏற்புரை வழங்குவார்.

மனைவியுடன் தகராறு கணவன் தற்கொலை

(மாவிட்டபுரம்)

மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக மனமுடைந்த கணவர் மதுவெறியுடன் நஞ்சையும் அருந்தி உயிரைப் போக்கிக்கொண்டார்.

மல்லாகத்தைச் சேர்ந்த கந்தர் வேலுப்பிள்ளை (57 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா இம்மரணம் குறித்து விசாரணைகளை நடத்தினார்.

காலஞ்சென்றவரின் மனைவி இலட்சுமி சாட்சியமளிக்கையில்: "காலமான தமது கணவர் மது அருந்தும் பழக்கமுடையவரெனவும், தொழிலுக்கு ஒழுங்காகச் செல்வதில்லையெனவும், உழைக்கும் பணத்தில் வீட்டுச் செலவுக்குத் தருவதில்லையெனவும், இதன் காரணமாக அடிக்கடி தமக்கும், காலமானவருக்கும் தகராறு ஏற்பட்டு வந்ததாகவும், சம்பவதினமும் தகராறு ஏற்பட்டதை அடுத்து மதுவெறியுடன் நஞ்சையும் அருந்திவிட்டு வீட்டுக்கு வந்த கணவர் மரணமடைந்ததாகவும் தெரிவித்தார்.

விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

சுன்னாகம் பொலிஸைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஏ. பொன்னையா சாட்சியை ஆஜர் செய்தார்.

மீண்டும் இந்தியா செல்வார்

(சாவகச்சேரி)

தற்போது சாவகச்சேரியில் தங்கியிருக்கும், இத்தொகுதியின் முன்னாள் எம். பி. திரு. வீ. என். நவரத்தினம் இம்மாதம் 22-ம் திகதி மீண்டும் இந்தியா செல்லவுள்ளார்.

இவர் இந்தியாவுக்குச் சென்றதும் அங்கிருந்து இங்கிலாந்து, ஜெனிவா, பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் தெரியவருகிறது.

ரூபவாஹினியில் இன்று

மாலை:

5-30 நாட்டுவளம்.
5-35 "ஹி ரே ம் ஸ்பேஸ் சேஸ்ரர்"
6-00 சுகாதார நிகழ்ச்சி
6-30 ஏமாளிகள் - திரைப்படம் (தமிழ்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 தகவல் நிகழ்ச்சி
7-45 எதிர்கால நிகழ்ச்சிகள்
8-15 செய்திகள் (சிங்களம்)
8-45 ஆங்கிலத்திரைப்படம்
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 திரைப்படத் தொடர்ச்சி
10-30 உலகச் செய்தித் தலைப்புகள்
10-35 திரைப்படத் தொடர்ச்சி
11-30 நிகழ்ச்சி முடிவு.

திருவிழா

[புலோலி]

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் இம்மாதம் 15-ம் திகதி விசாகத் திருவிழாவும் சண்முகார்ச்சனையும் நடைபெறவுள்ளது.

இன்றைய பலன்

மாதம்: வைகாசி.
திகதி: 3 (1984-5-16)
வாரம்: புதன்
திதி: பிரதமை காலை 9-34ன் மேல் துதியை.
நக்ஷத்திரம்: அனுஷம் பிற்பகல் 2-30ன் மேல் கேட்டை.

மேடம்: தம்பதியின் ரேகைகள் படரும் எதற்குமடுக்காலும் சிறியவர்கள் கொடுக்கல் வாங்கல் மூலம் ஏமாற்றம் அடையநேரிடும் தொழில் துறையிலும் தொல்லைகள் தோன்றிமறையும்.

இடபம்: பேச்சுவன்மையினால் பிறருடைய நன்மதிப்பைப் பெறுவீர்கள் கல்வித்துறையில் திருப்திகரமான முன்னேற்றம் உண்டு. சிலருக்கு அதிர்ஷ்டவசம் கிடைக்கலாம் சிறப்பான தினம்.

மிதுனம்: குடும்பக் கவலை தலைதூக்கும் பிதாவழிப்பிணிக்கும் இடமுண்டு அன்னியர்கள் மூலம் தொல்லைகள் தோன்றி மறையும் பணவிவகாரத்தில் அபிப்பிராய பேதங்கள் உருவாகும் மிகச்சுமாரான தினம்.

கடகம்: வாகனச்சுகத்துடன் வாழ்க்கைநலம் வந்துசேரும் தாய்வழித்தனத்துடன் தன்மானம் தலைதூக்கும்.

சிங்கம்: இதயம் இனியதாக இல்லும் கவர்ச்சிகரமான பொருள்களில் அதிகஆர்வம் பிறக்கும் சிலர் வாழ்க்கையில் பொதுசனத் தலைமைக்கும் இடமேற்படலாம் முயற்சி முன்னேற்றத்தைத்தரும்.

கன்னி: பக்கத்தில் படுகுழி தோன்றுவதற்கு பகைவர்கள் காத்திருப்பர். முகமன் பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடனிருக்கவும் ஆயுதபிரயோகத்துக்கும் இடமுண்டு அவதானம் வேண்டும்.

துலாம்: கவர்ச்சிகரமான பொருட்களை சேகரிப்பதில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள் கலைஞர்களுக்குப் புதிய சிந்தனைகள் உருவாகும் குடும்பத்தில் உறவுமுறைகள் மிகவும் சுமுகமாக இருக்கும்.

விருச்சிகம்: செய்தொழில் தளர்ச்சியடையும் சரிசெய்வதற்கு சகாக்களே சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பர் பிரயாணத்தைத் தவிர்க்கவும் இறைநம்பிக்கை நன்று.

தனுசு: பெரியோரைப் பேணுவதன்மூலம் பெரிய காரியங்களைச் சாதிப்பீர்கள் கலைத்துறையில் அதிக புகழ் கிடைக்கும் சிலருக்கு அரசியலிலும் அதிக ஆர்வம் பிறக்கும் மகிழ்ச்சியான தினம்.

மகரம்: இடமாற்றத்துக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம். சிலருக்கு வெளியூர் பயணத்துக்கு இடமேற்படும் தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும் உற்சாகமான தினம்.

கும்பம்: வணிகத்துறையில் பல வாய்ப்புகள் ஏற்படும் தாய்வழி பொருள்வரவுக்கும் இடமுண்டு உயர்கல்வியில் ஈடுபடுபவர்களுக்கு உற்சாகமான தினம்.

மீனம்: பலவித சிந்தனைகளால் தாக்கப்படுவீர்கள் உடல் நலனும் சிறிது பாதிக்கப்படலாம் திறமைகளில் மோசடி நடக்கும் நம்பிக்கையின் மூலம் பணம் விரயமாகும்.

திருமலை
வே. ரவீந்திரன்

தாயார் கண்டித்தார் மகள் தற்கொலை

(மாவிட்டபுரம்)

வீட்டு வேலைகளை கவனம் செலுத்தாத மகளை தாயார் கண்டித்ததால் மனமுடைந்த மகள் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

மயிலிட்டியைச்சேர்ந்த தங்கராசா சாந்தினிதேவி (19 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இம்மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு நா. தம்பிராசா விசாரணை நடத்தினார்.

காலமானவர் முற்கோபமும் பிடிவாத குணமுடையவரெனவும், வீட்டுவேலைகளில் கவனம் செலுத்தாமை குறித்து தாயார் ஏசியதால் மனமுடைந்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

நஞ்சருந்தியவரை உடன் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோதும் அவர் மரணமாகிவிட்டதாகவும் சாட்சியங்களிலிருந்து தெரியவந்தது.

விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. காங்கேசன்துறை பொலிஸ் கான்ஸ்டபிள் இ. மகேந்திரன் சாட்சியை ஆஜர் செய்தார்.

முஸ்லிம் இளைஞர் கொலைவழக்கு:

எதிரிக்கு 7 வருட கடூழியச் சிறை

(மட்டக்களப்பு)

1977ம் ஆண்டு இலங்கையெங்கும் ஊரடங்குச்சட்டம் அமுலிலிருந்தபோது முஸ்லிம் வாலிபர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக பொலிசாரால் குற்றம் சுமத்தப்பட்டவரை குற்றவாளியாகக்கண்ட மட்டக்களப்பு உயர் நீதிமன்ற நீதிபதி எதிரிக்கு 7வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்தார்.

1977ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ம் திகதி இலங்கையெங்கும் ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்த நேரம் அக்கரைப்பற்றுவாசியான ஏ. எல். நஜுமுதீன் (25-வயது) என்னும் வாலிபர் துவக்கால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

இதனையடுத்து அம்பாறை சீனித்தொழிற்சாலை காவலாளியான பி. எம். விஜயசேன என்பவரைக் கைதுசெய்து அக்கரைப்பற்று பொலிசார் வழக்குத்தாக்கல் செய்தனர்.

இவ்வழக்கு விசாரணை சிங்கள ஜூரர்கள் முன்னிலையில் நடைபெற்றது. விசாரணை முடிவில் எதிரி குற்றவாளி என ஜூரர்கள் ஏகமனதாக முடிவுசெய்தனர்.

இதனையடுத்து உயர் நீதிமன்ற நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் எதிரிக்கு 7வருட கடூழியசிறை தண்டனை விதித்தார்.

இவ்வழக்கில் எதிரிதரப்பில் சட்டத்தரணி எஸ். நாகராஜாவும் அரசதரப்பில் கே. வி. எஸ். ஸ்ரீஸ்கந்தகுமாரும் ஆஜராகினார்கள்.

தையல் பயிற்சி நிலையம்

[சாவகச்சேரி]

தொழில் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற தையல் பயிற்சி நிலையம் இம்முறை

[7ம் பக்கம் பார்க்க]

அகன்ற இலைகளையும் கோரை வகைக் களைகளையும் நெற்பயிரில் கட்டுப்படுத்த

ரெட்ஸ்டார்

அங்கிலோ ஏஷியன்

எம்.சீ.பீ.ஏ.60% தெளியுங்கள்

மி. லீ. 100 - ரூ 15.00 மி. லீ. 200 - ரூ 27.50
„ „ 450 - ரூ 54 00 லீற்றர் 4 - ரூ 457.50

TEAM

ANGLO-ASIAN AGRO CHEMICALS

அங்லோ ஏஷியன்
பேர்டிலைசர்ஸ் லிமிட்டட்
சாற்றர் பேங்க் கட்டிடம் கொழும்பு 1.

சாந்தி (யாழ் நகர்)
10-30, 2-30, 6-00
சிவாஜி—தேவிகா
சாந்தி
முற்றும் புதிய பிரதி

வெஸ்லி (கல்வியங்காடு)
தினசரி: 2-30, 5-30
சிவாஜி — பிரபு
சங்கிலி

மனோகரா (யாழ் நகர்)
10-30, 2-30, மட்டும்
எம். ஜி ஆர். - லதா
நேற்று இன்று நாளை

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம் ஜி. ஆர். - பத்மினி
அரசிளங்குமரி
(புதிய பிரதி)

ராணி (யாழ்: நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
ஜெய்சங்கர்
குழந்தையும்
தெய்வமும்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10.30, 2-00, 6-00
சிவாஜி — பாரதி
தங்கச் சுரங்கம்
(புதியபிரதி)
16-5-84 முதல்
காவல்தெய்வம்

லிடோ (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30
6-15
சங்கர் - ரூபா
ஒரு தலை ராகம்

வெலிங்டன்
தினசரி 10-30, 2-15,
(Sp Show) 2:15
4-15 and 7-30
Sylvestor Stylonne
as
ROCKY III
(Color)

ராஜா (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-00
4-00 and 6-00
கடைசிச் சந்தர்ப்பம்
2 தினங்கள் மட்டும்
PIRANA II
FLYING KILLERS
திகிலூட்டும் சம்பவங்கள்
18 - 5 - 84
ராதிகா ரதி சுதாகர்
நிறம்மாறாத பூக்கள்
[புதிய பிரதி]
[[illegible] கலர்]

வின்ஸர் (யாழ். நகர்)
Daily 10-30, 2-00, 4-30
6-30
SNAKE IN THE
EAGLE'S SHADOW
Snake
Kungfu — Karate
கடைசிச் சந்தர்ப்பம்
17-5-84 வரை மட்டுமே
18-5-84 முதல்
எம். ஜி ஆர். —ஜெயலலிதா
ஒளி விளக்கு
(புதிய கலைப் பிரதி)

சாவகச்சேரி பொலிஸ்நிலைய

கான்ஸ்டபிள் கொலை

ஒருவர் தேடப்படுகிறார்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பொலிஸ் கான்ஸ்டபிள் சுப்பிரமணியம் கொலை செய்யப்பட்டது தொடர்பாக சந்தேகத்தின்பேரில் [illegible] கடைக்காட்டைச் சேர்ந்த ஒருவர் ஆயுதப்படையினரால் தேடப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 6ம் திகதி இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட கைப்பை ஒன்றில் இருந்து முன் [illegible] கடைக்காட்டைச் சேர்ந்த ஒருவரது அடையாள அட்டையும் இரத்தம் தோய்ந்த உடைகளும் கைப்பற்றப்பட்டது தெரிந்ததே.

கடந்த 11ம் திகதி மேற் குறிப்பிட்ட அதே இடத்தைச் சேர்ந்த மோகன்ராஜ் என்பவர் ஆனையிறவு தடை முகாமில் வைத்து சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தேடப்படுபவருக்கும் தனக்கும் எதுவித தொடர்பும் கிடையாது என்று அவர் தெரிவித்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. [ஈ]

இன்று ஆரம்பமாகிறது

உடுப்பிட்டி கட்டட பயிற்சி நிலையத்தில் 3 நாள் பொருட்காட்சி

(கரவெட்டி)

உடுப்பிட்டி இமையாணனில் இடத்தில் அமைந்துள்ள கட்டடத் தொழிற்பயிற்சி நிலையத்தில் இன்று தொடக்கம் மூன்று நாட்களுக்கு பொருட்காட்சி நடைபெறவுள்ளது.

உடுப்பிட்டித் தொழிற்பயிற்சி கட்டடத் தொழிற்பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களினால் உருவாக்கப்பட்ட திறன்மிக்க [illegible] இப்பொருட்காட்சியில் இடம்பெறவுள்ளன.

இப் பொருட்காட்சியை இன்றுமாலை கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு இ. ஐயாத்துரை, யாழ். உதவித் தொழில் ஆணையாளர்கள் திரு எஸ்.வி. இராசநாயகம், திரு எஸ். தியாகராசா ஆகியோர் திறந்து வைப்பார்கள்.

யாழ். தொழில் திணைக்கள சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தர் திரு கே. சிவப்பிரகாசம் தலைமையில் ஆரம்பமாகும் இந் நிகழ்ச்சியின்போது யாழ் தொழில் திணைக்கள பிரதம [illegible] திரு இ மயில்வாகனம் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

சிறப்பாக சோமாதாவின் கலியுக அற்புதமான [illegible] அபிடேகமும் பக்தி பரவசமூட்டும் வகையில் இப்பொருட்காட்சியில் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்பொருட்காட்சி எதுவித கட்டணமுமின்றி இலவசமாக நடாத்தப்படுவதாக யாழ் தொழில் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஈ)

தென்மராட்சி பிரஜைகள் குழு

[சாவகச்சேரி]

தென்மராட்சி மக்களின் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், வேண்டிய மனித உரிமை மீறல்களை உடனுக்குடன் உரியவழியில் திரட்டி நடவடிக்கைகளைமேற்கொள்ளும் பொருட்டு சாவகச்சேரியில் தென்மராட்சி பிரஜைகள் குழு என்னும் பெயரில் ஒரு புதிய அமைப்பு இவ்வார இறுதியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

பண்டத்தரிப்பு ஐ. வி. கழகம் சாம்பியன்

[பண்டத்தரிப்பு]

வலிதென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் விளையாட்டு அமைச்சின் ஆதரவில் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதிப்போட்டியில் பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக் கழகமும், சண்டிலிப்பாய் "எஸ் பி. சோ" விளையாட்டுக் கழகமும் பங்குபற்றின.

இறுதியில் பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக்கழகம் 2:0 கோல்களால் வெற்றியீட்டி சாம்பியனாகத் தெரிவுசெய்யப் பட்டது.

தையல்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மீசாலையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்நிலையத்தில் சுமார் 50 இளம் பெண்களுக்குத் தையல் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

ரீகல் (யாழ் நகர்)
15 and 16
Daily 10-30 2-15
and 4-30
"Walking Tall" Fame
Hero ... in
FRAMED
(Full of Action) - Color

யாழ் இந்து மகளிர் கல்லூரி

(யாழ்ப்பாணம்)

மாவட்ட ரீதியில், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட பாடசாலைத்தோட்டப்போட்டியில் முதலாம் இடத்தை வசாவிளான் ம.ம. வித்தியாலயமும் இரண்டாம் இடத்தை யாழ். இந்து மகளிர் கல்லூரியும், மூன்றும் இடத்தை இராமநாதன் மகளிர்கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

இரண்டாம்இடத்தை யாழ். இந்துபெற்றது என்று பத்திரிகையில் முன்னர் வெளியான செய்தி தவறானதாகும்.

வெற்றிவேலு பாராட்டுவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் முப்பத்தைந்து ஆண்டுகளாக ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு பூ. வெற்றிவேலு சேவை நலன் பாராட்டு விழா இன்றுபிற்பகல் கல்லூரிதிறந்த வெளி அரங்கில் நடைபெறுகிறது.

கல்லூரி அதிபர் திரு. க. மகேஸ்வரன் தலைமையில்நடைபெறும் இவ்விழாவில் பல சிறப்பு அம்சங்கள் இடம்பெறுகின்றன. திரு. பூ. வெற்றிவேலு [illegible] பேச்சு [illegible] வெற்றிலையும் வழங்கப்படும்,

கடன்தொல்லை

குடும்பஸ்தர் தற்கொலை

(மாவிட்டபுரம்)

விவசாயத்தில் ஏற்பட்ட நஷ்டம் காரணமாக கடன்தொல்லைகள் அதிகரித்ததால் மனமுடைந்த குடும்பஸ்தர் ஒருவர் நஞ்சருந்தி மரணமானார்.

ஏழாலையைச் சேர்ந்த இளையதம்பி ஜீவரத்தினம் (32வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவர்.

திடீர் மரணவிசாரணை அதிகாரியும், சமாதான நீதிபதியுமான திரு நா. தம்பிராஜா இம்மரணம் குறித்து விசாரணை நடத்தினார்.

இறந்தவரின் மனைவி மல்லிகாதேவி சாட்சியமளிக்கையில் "இறந்தவர் 4 பிள்ளைகளுக்கு தந்தையெனவும் மது அருந்தும் பழக்கமும் உடையவரெனவும் கடந்த முறை வெள்ளத்தினால் விவசாயம் செய்கை பாதிக்கப்பட்டு 75 ஆயிரம் ரூபாவரை நஷ்டம் ஏற்பட்டதால் மனமுடைந்திருந்ததாகவும், அதன்காரணமாக கடன் தொல்லைகளும் ஏற்பட்டதாகவும், அத்துடன் காசநோய் பீடித்திருந்ததால் மனமுடைந்திருந்ததாகவும் இதன் காரணமாக நஞ்சருந்தியதாகவும் தெரிவித்தார்.

விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

வங்கி ஊழியர் பரீட்சை

(கரவெட்டி)

இலங்கை மத்திய வங்கி இலங்கைவங்கி, மக்கள்வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவனவற்றுக்கு எழுதுநர்கள், உதவிக்காசாளர்கள் பதவிகளுக்கான வங்கிச்சேவைகள் பரீட்சை இம்மாதம் 27ம் திகதி நடைபெறவுள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் இப்பரீட்சை இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

புதிய இயக்குநர் சபை

(புலோலி)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர்சபை உறுப்பினர் தெரிவுக்கான தேர்தல் திரு க. துரைராசா தலைமையில் நடைபெற்றது:

திரு. க. துரைராசா, திரு. க. சிவரத்தினம், திரு. வி. பி சற்குணராசா. திரு. வி. தியாகலிங்கம் திரு. ந திருஞானசம்பந்தபிள்ளை. திரு. ஆ. துரைரத்தினம், திரு. கோ. குமாரவேலு ஆகியோர் இயக்குநர் சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

பின்னர் நடைபெற்ற இயக்குநர் சபைத் தலைவர் தெரிவில் திரு. க. துரைராசா மீண்டும் தலைவராகத்தெரிவுசெய்யப்பட்டார். திரு. க. சிவரத்தினம் உப தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

3 தமிழ் இளைஞர்க்கு மேற்கு ஜெர்மன் அரசியல் தஞ்சம்

[சாவகச்சேரி]

மேற்கு ஜேர்மனியில் அரசியல் தஞ்சமகோரி ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் இருக்கின்றபோதிலும் இதுவரை மூன்று தமிழ் இளைஞர்களுக்கு மட்டுமே மேற்கு ஜேர்மன் அரசாங்கம் நிரந்தர அரசியல் தஞ்சம் அளித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இம்மூன்று தமிழ் இளைஞர்களுக்கும் அந்நாட்டு அரசாங்கம் தமது கடவுச்சீட்டுக்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஏனையதமிழ் இளைஞர்களுக்கு அரசியல் தஞ்சம் அளிக்கலாமா? இல்லையா? என்பது பற்றிய விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுவதாகவும் அறியப்படுகின்றது.

நிரந்தர அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் மூன்று தமிழ் இளைஞர்களுள் திரு வண்ணை ஆனந்தன் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆளுமை அதிபர் வெற்றி வேலவ நீடுவாழி

வாழிய உலகமெங்கணும் வைதிக சைவம் வாய்மை
ஊழியல் அதிபரென்று உயரும் விபந்து போற்ற
சூழியல் சாவகச்சேரி இந்தெனச் சிறக்க வைத்த
ஆளுமை அதிபர் வெற்றி வேலவ நீடுவாழி

சோதனை மிகுந்த போதும் கடுபட்டு நின்றபோதும்
சாதனை நிலைவேயன்றிச் சகித்து நீயிருந்த நிலை
வேதனை அகற்றி வேளைக் வெற்றியே
பெறற்குக் கல்விப்
போதனை மலர வைத்தும் புகழ்மிக
ஈட்டிக் கொண்டோய்

பொன்பொலி முகமும் வாய்மை பொருந்திய
வாக்கும்
இன்பமே சூழ்ந்த நோக்கும் இதயத்தில்
கருணை பாயும்
அன்பினில் தோய்ந்த நட்பும் அமைந்தநல்
வெற்றிவேலு
பல்நெடுங் காலம் வாழ்ந்து பணிபல செய்க
இன்னும்

வாழுறு நாட்கள் யாவும் வளம்பல பெற்று வாழி
சூழுறு சுற்றம் சோற்றக் கலமொடு சிறந்து வாழி
வாழுறு மனைசற்ற கண்ணிய மனைவி
நாகேஸ்வரியொடு
ஏழுலை சேர்ந்த எல்ல இறைவருள் பெற்று
என்றும் வாழ்க.

-- வித்துவான் மு. சபாரத்தினம்

தொண்டமானாற்றில் நவீனமீன்பிடி துறைமுகம்!

அமைக்குமாறு அமைச்சரிடம் கோரிக்கை

(சித்தன்கேணி)

தொண்டைமானாற்றில் நவீனமீன்பிடி துறைமுகத்தை அமைக்குமாறு தொண்டைமானாறு கிராமோதயசபை கடற்றொழில் அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேராவுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

தொண்டைமானாறு கிராமோதயசபைக் கூட்டம் அண்மையில் தலைவர் திரு த. துரைரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் கால்நடை வளர்ப்போர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும்முகமாக கால்நடை வைத்தியரையும் கால்நடை வளர்ப்போரையும் அழைத்து கருத்தரங்கு ஒன்று நடாத்துவது என்றும், பத்து லட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் வீடமைப்புக் கடன்கள் மந்தகதியில் நடைபெறுவதாகவும் இது தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு உதவி அரசாங்க அதிபரையும் யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை முகாமையாளரையும் கேட்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

தென்னை அபிவிருத்தி மாதிரிக் கிராமம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் முதலாவது தென்னை அபிவிருத்தி மாதிரிக் கிராமமாக வட்டக்கச்சி 'சுவிச்சென்ரர்' பகுதி தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்குப் பொறுப்பான உதவி அரசாங்க அதிபர் திரு. கே. குணராசா இம்மாதிரிக் கிராமத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

இவ்வைபவத்தில் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். திருத்தணிகாசலம், அபிவிருத்தி உத்தியோகத்தர் வே. ஸ்ரீ விநோதன், விவசாய போதனாசிரியர் திருமதி ஆனந்தராசா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

'இந்த' பஸ்களுக்கு

யாழ். பஸ்நிலையத்திற்கு 'டீசல்' வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின்கீழ் இயங்கும் பருத்தித்துறை, காரைநகர் டிப்போக்களைச் சேர்ந்த பஸ்களுக்கு யாழ். பஸ் நிலையத்தில் வைத்தே டீசல் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, வேலணை டிப்போக்களில் நடந்த சம்பவங்களைத் தொடர்ந்து குறிப்பிட்ட இரு டிப்போக்களும் மூடப்படப்போவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படவில்லை.

ஆனால் இரு டிப்போக்களைச் சேர்ந்த பஸ்களுக்கும் அண்மைக்காலமாக யாழ். பஸ் நிலையத்திலிருந்தே டீசல் வழங்கப்பட்டுவருகிறதாம்.

இதுபற்றி பஸ்டிப்போ அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது அவர் எதுவும் தெரிவிக்கமுடியாதென மறுத்துவிட்டார். (மா)

கடத்தல்காரர்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் விடப்பட்டிருக்கலாமெனக் கருதப்படுகிறது. அப்பகுதிகளும் தீவிர தேடுதலுக்குள்ளாகின" என்று தெரிவித்த அமைச்சர் லலித் அத்துலத்முதலி;

"கடத்தல்காரர்கள் அலென் தம்பதியினரின் குரலைப் பேசக் கூடிய வசதிகளைச் செய்ய வேண்டுமெனவும். இதன் மூலம் அவர்கள் பற்றிய நிலைமையினைத் தம்மால் தெரிந்துகொள்ள முடியுமென்றும் கோரிக்கை விடுத்தார்

நேற்றைய பத்திரிகையாளர் மகாநாட்டில், "அமெரிக்கத் தம்பதிகளைக் கண்காணிப்பு வளையம் ஊடாக இந்தியாவிலிருந்து கொண்டுவரவேண்டியிருந்தால் என்னசெய்வீர்கள்?" என்று நிருபர் ஒருவர் கேட்டபோது—

"அத்தகைய நிலைமை ஏற்பட்டால் கண்காணிப்பு வளையத்தைத் தாண்டிவர அனுமதி தரப்படும்" என்று அமைச்சர் பதிலளித்தார்.

"அப்படி வரும்போது கடத்தல்காரர்களைக் கைதுசெய்ய மாட்டீர்களா?" என்று மற்றொரு நிருபர் கேட்டார்.

"அப்படி உறுதியளிக்கமுடியாது ஆனால் பாதுகாப்புப் படைகள் திட்டமிட்டு நடவடிக்கைகள் எதனையும் கடத்தல்காரர்கள்மீது எடுக்கமாட்டார்கள்" என்று அமைச்சர் பதிலளித்தார்.

"ஈழமக்கள் புரட்சிகர விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த செந்தில் என்பவர் இந்தியாவிலிருந்து, "அமெரிக்கத் தம்பதிகளை விடுவிப்போம்" என்று கூறிய செய்தியே அவர்கள் சார்பிலிருந்து எமக்கு இதுவரை கிடைத்துள்ளது" என்றும் அமைச்சர் கூறினார்.

கடத்தப்பட்ட அமெரிக்கத் தம்பதிகளை அவர்கள் விடுதலை செய்யப்படும் இடத்திலிருந்து மீட்டுவரவும், அவர்களுக்கு வேண்டிய வைத்திய வசதிகளை வழங்கவும் விமானமொன்றும், வைத்தியர் குழுவொன்றும் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (கி)

சித்திர கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் சிறுவர் சித்திரக்கண்காட்சி இன்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவுள்ளது.

கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலயச் சித்திரக் கலைக் கழகம் ஏற்பாடு செய்துள்ள இச் சித்திரக்கண்காட்சி பாடசாலை மண்டபத்தில் அமையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சித்திரக் கல்வி அதிகாரி திரு. ஆ. தம்பித்துரை பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார். (மா)

நேற்றும்..-

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மட்டக்களப்பு நகர் நேற்று மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது.

மரண அறிவித்தல்

ஞானானந்தம் ஞானப்பிரகாசம்

உரும்பிராய் கிழக்கு புனித மைக்கேல் ஆலயத்தைச் சேர்ந்த இளைப்பாறிய தலைமை ஆசிரியர் ஞானானந்தம் ஞானப்பிரகாசம் அவர்கள் 15-5-84ல் காலமானார். இவர் ஞானமணியின் அன்புக் கணவரும், ஜோர்ஜ் குருசேவ், கொர்னேலியஸ் ஆகியோரின் பேரனுமாவார். இவரது பூதவுடல் 16-5-84 மாலை 3 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து உரும்பிராய் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார் உறவினர், நண்பர்கள் தயவு செய்து இதை ஏற்றுக் கொள்ளவும்.

இ ஜோர்ஜ் குருசேவ்
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்

2382

மரண அறிவித்தல்

ஆறுமுகம் தில்லையம்பலம்

இணுவிலைச் சேர்ந்த ஆறுமுகம் தில்லையம்பலம் காலமாகிவிட்டார். இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும் [1] சந்திரபவானி தொழில் உத்தியோகத்தர், யாழ்ப்பாணம், [2] ஏகாம்பரநாதன் [நாதன்] பிரபல வர்த்தகர், எட்டியாந்தோட்டை, [3] விஜயநாதன் ஆசிரியர் ஜசிந்தா றோ. க. பாடசாலை, பண்டத்தரிப்பு, [4] யோகநாதன், [5] விஜயகுணராணி ஆசிரியை, மகாவித்தியாலயம், கிளிநொச்சி [6] யோகேஸ்வரி, ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி, கோப்பாய் [7] இந்திரகுமாரி, இலங்கை வங்கி, யாழ்ப்பாணம், [8] இராசகுமாரி, சவூதி அரேபியா, [9] தவானந்தராசா சவூதிஅரேபியா, [10] இராசபவானி ஆகியோரின் அன்புத் தந்தையும் [1] திரு பரமசாமி இராமநாதன் கல்லூரி, சுன்னாகம், [2] சுசில தேவி [3] சஞ்சுனா, ஆசிரியை, ஜசிந்த றோ. க. பாடசாலை, பண்டத்தரிப்பு, [4] இராசேஸ்வரி, [5] திரு நாகரத்தினராசா, உபதபால் அதிபர், மாரீசன்கூடல், [6] திரு மண்டலநாயகம், வெளிக்கள குறூப், நாவற்குழி ஆகியோரின் அன்பு மாமனாரும் தாஷ்யா, பிரணவன், கௌரிசங்கர், தினேஷ்சங்கர், நிரஞ்சன், கோபிதன், தர்மதா, கோபிதா, ஜெயகுலராஜ், கஜேந்திரன், துஷ்யந்தி, ஜெயந்தி, கோகிலவதனி, பிரசன்னா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரது சமயக்கிரியைகள் இன்று 16-5-84 நண்பகல் 12 மணிக்குத் தகனக்கிரியைக்காக பூர்வீக மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். நண்பர்களும் உறவினர்களும் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

2381

வடபிராந்திய போக்குவரத்துச் சபை

ஒரு லட்சம் ரூபாவை நட்டஈடாக வழங்க உத்தரவு!

(கரவெட்டி)

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் ஊழியரான கரவெட்டியைச் சேர்ந்த திரு. வீரகத்தி சபாபதிக்கு நட்ட ஈடாக ரூபாய் ஒருலட்சம் வழங்குமாறு தொழில் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரணை செய்த வடபிராந்திய தொழில் நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். என். குருசாமி இத்தீர்ப்பை வழங்கினார்.

நீதிபதி தமது தீர்ப்பில் திரு. சபாபதி சாலை அத்தியட்சகர் என்ற 4-ம் தர பதவியிலிருந்து விசாரணை உத்தியோகத்தராக பதவி இடமாற்றம் செய்யப்பட்டது அவரது பதவிக்குறைப்பாகும் எனவும் வ. பி. போக்குவரத்துசபையின் உதவி ஆளணி முகாமையாளராகக் கடமையாற்றிய அவருக்கு ஆளணி முகாமையாளர் நியமனத்தை வழங்காதுவிடுத்தமை நியாயமற்றது எனவும் இதனால் அவருக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்வதற்காக ஒரு லட்சம் ரூபாவை வழங்கவேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

வடபிராந்தியப்போக்குவரத்துச்சபையின் சார்பில் சட்டத்தரணிகள் சு. ஜெ. தர்மரத்தினம், திருமதி எஸ். விக்னேஸ்வரன் ஆகியோர் ஆஜரானார்கள்.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணி செ. கோடீஸ்வரன் ஆஜரானார்.

அமெரிக்க...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

னர்.

அமெரிக்கத் தம்பதிகள் ஆரோக்கியமான நிலையில், மிகவும் மகிழ்ச்சியாகக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

திரு. அலனும் திருமதி அலனும் முதலில், தாங்கள் வசித்த வீட்டுக்குச் சென்று, பார்வையிட்டனர்.

இச்செய்தி அச்சுக்குப் போகும்போது கிடைக்கப்பெற்ற தகவலின்படி அமெரிக்கத் தம்பதிகள் நேற்றிரவே விசேடவிமானத்தில்கொழும்புசென்றிருக்கலாம் என்று தெரியவருகிறது.

கொள்ளைக்கும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன் இரவு குருநகரில் வசிக்கும் அலன் தம்பதிகள் பணயக் கைதிகளாகக் கடத்திச் செல்லப்பட்டபொழுது அவர்கள் வீட்டிலிருந்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுச் செலவாணி நோட்டுக்களும் எம்மால் கொள்ளையடிக்கப்பட்டது எனும் சாரப்பட 12-5-84 ஈழநாட்டில் செய்தி வெளியிடப்பட்டது. அவ்வீட்டில் இருந்த பணம் கொள்ளையடிக்கப்பட்டதற்கும் எமக்கும் எதுவிதத் தொடர்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

இத்தவறான செய்தி வெளியிடப்பட்டதனால் ஈழ மக்கள் மத்தியிலும், உலக அரங்கிலும் எமது அமைப்பிற்கு அவப்பெயர் உருவாகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இக்காரணத்தினால் இவ் மறுப்பறிக்கையை உங்கள் பத்திரிகையில் உரிய முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்குமாறு வேண்டுகின்றோம்."

இந்திரா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஆயுதப் பிரிவினர் தான் மக்கள் விடுதலைப்படை என்று மேற்படி துண்டு பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பத்மநாபன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு பத்மநாபன் பற்றி அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

"இவர் இணுவிலைச் சேர்ந்தவர். க. பொ. த சாதாரண தரம்வரை படித்தவர். ஆயுதப் போராட்டம்மூலம் சோஷலிச தமிழ் ஈழம் ஒன்றை அமைக்கும் குறிக்கோளைக் கொண்ட இவர் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும்போராடுபவர்

"ஆரம்பத்தில் "ஈரோஸ்" இயக்கத்திலிருந்த இவர் பின்னர் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் சேர்ந்துகொண்டார். திருக்கோயில் வங்கிக் கொள்ளையில் கைது செய்யப்பட்டு மட்டக்களப்புச் சிறையிலடைக்கப்பட்டிருந்தபோது தப்பிச்சென்றவர்."

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு மே மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at the General post office Sri Lanka under number, B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegrm: Eelanadu, Telephone: 22389 — 24126.